## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.127/2022.
Prosecution witness for P.W. 14 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ஐசக் மகாராஜா. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.07.2026.

Accused present.

முதல் விசாரணை

நான் தற்போது நாசரேத் காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு திருச்செந்தூர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது 16.01.2020 அன்று காலை 10 மணியளவில் நிலைய குற்ற எண் 10/2020 இதச 294(பி), 302 பிரிவுகள் படியான வழக்கு சம்பந்தப்பட்ட இறந்துபோன லெட்சுமணன் என்பவர் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக காவலரின் வேண்டுகோள் கடிதத்துடன் பிரேதத்தை திருச்செந்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று மருத்துவ அதிகாரியிடம் ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனை சமயத்தில் நான் மருத்துவருடன் இருந்து பிரேத பரிசோதனை முடிந்த பிறகு பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனை சமயத்தில் பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட வெள்ளை நிற கட்டம்போட்ட சட்டை, வெள்ளை நிற கட்டம்போட்ட சாரம், சிகப்பு நிற ஜட்டி ஆகியவற்றை பெற்று நிலையம் வந்து ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். 18.02.2020 அன்று திருச்செந்தூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்து கடிதம் பெற்று வழக்கு சொத்துக்களை பெற்று திருநெல்வேலி வட்டார தடய அறிவியல்

ஆய்வகத்தில் ரசாயன பரிசோதனைக்காக ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

16.01.2020 அன்று கைப்பற்றப்பட்ட பொருட்களைதான் 18.02.2020 அன்று நீதிமன்றத்தில் நான் ஒப்படைத்தேன் என்றால் நான் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். எனக்கு கடவுச்சீட்டு கொடுக்கப்படவில்லை என்றும், இந்த வழக்கில் ஏற்பட்ட காலதாமதத்தை சரி செய்வதற்காக நான் உருவாக்கப்பட்ட சாட்சி என்றும் சொன்னால் சரியல்ல. நான் மேற்படி தேதியில் மேற்படி பணிகளை செய்ததாக நாட்குறிப்பை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. அந்த நாட்குறிப்பை நீதிமன்றத்தில் ஒப்படைத்தால் மேற்படி தேதியில் நான் என்ன பணி செய்தேன் என்பது தெரியும் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் உற்பத்தி செய்யப்பட்ட பொய்யான சாட்சி என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.07.02 18:15:58 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.